# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.02/மா/2025
நாள் 13.11.2025

பா. முருகன்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 9
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை–24, காமராஜர் காலனி, 3வது தெரு, கதவு எண் 27 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பா. முருகன் என்பவரின் 15.11.2024 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் **15.11.2024** அன்று பெறப்பட்டு 02/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–24, காமராஜர் காலனி, 3வது தெரு, கதவு எண் 27 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பா. முருகன் என்பவர் தனது 15.11.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் சமூக ஆர்வலர் மேலும் நான் தெரிவிப்பது கதவு எண் 27 தெற்கு சிவன் கோவில் தெரு கோடம்பாக்கம், சென்னை 24 என்கிற முகவரியில் விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடம் முடியும் நிலையில் உள்ளது. இந்த கட்டிடம் கட்டும் பணி நடந்து கொண்டு இருக்கும் போதே சாலையையும், நடைபாதையையும் முழுவதுமாக ஆக்கிரமித்து கட்டிட கழிவுகளை சாலையில் அங்கும் இங்குமாக எந்த பாதுகாப்பு சட்ட விதிகளையும் பின்பற்றாமல் கட்டிட பணி நடந்து கொண்டு இருந்தது எனது வீட்டிலிருந்து 1000 மீட்டர் தொலைவில் உள்ளது. ஆக்கிரமிப்பு கட்டிடம் உடனடியாக **1913**க்கு புகார்கள் செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றினேன். மீண்டும் இது போல் ஆக்கிரமிப்புகள் தொடர்ந்து நடைபெற்றதால் RTI–யில் கேள்வி எழுப்பினேன். இக்கட்டிடதுக்கு முறையான அனுமதி பெறப்பட்டுள்ளதா வரைபடத்தின்படி தான் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா நான்குபுற இடைவெளிகள் மற்றும் பார்க்கிங் வசதிகள் போன்ற கட்டிட சட்ட விதிமுறைகள் பின்பற்றி சட்டப்படி கட்டப்படுகிறதா என்று பொது தகவல் அதிகாரியிடம் கேள்விகள் எழுப்பப்பட்டது.

நாள் 27.6.2024 அன்று அதற்கு நாள் 20.08.2024 அன்று RTI அதிகாரி அவர்கள் கட்டிட அனுமதி எதுவும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளிடம் பெறவில்லை என பதில் அளிக்கப்பட்டது. அதன் நகல் இம்மனுவுடன் இணைப்பு. எனவே எனது புகார் மனுவை பெற்று கொண்டு இதனால் வரை எந்த நடவடிக்கையும் இல்லை பதிலும் இல்லை இது சம்பந்தமாக AE அவர்களிடம் நேரில் சென்று நடவடிக்கை பற்றி கேட்ட போது சரியான பதிலும் இல்லை என்பதால் சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் அவர்களுக்கு நோட்டிஸ் வழங்கி சட்ட விதிகள்படி கட்டிடம் கட்டவும் பார்க்கிங் வைத்து கட்டவும் அறிவுறுத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்திரவு இட வேண்டி நீதியரசர் அவர்களை பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் தனது 30.07.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்பித்துள்ளார்:

> ''மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட புகார் குறித்து தெரிவிப்பது யாதெனில், மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112 கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட எண் 27, தெற்கு சிவன் கோவில் தெருவில் எண் 27 என்கிற கதவு எண் கொண்ட கட்டிடம் எதும் இல்லை. ஆதலால் இம்மனு மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

5. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.08.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 20.08.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு நேரடியாக ஆஜராகவில்லை.

7. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் 20.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

> ''மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட புகார் குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கள ஆய்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112 கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட தெற்கு சிவன் கோவில் தெரு எண் 27 ல் கட்டிடம் எதும் இல்லை. இதுகுறித்து மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மனுதாரரும் கதவு எண் தவறாக அளித்து விட்டதாக வாய் மொழியாக தெரிவித்துள்ளார். ஆதலால் மனுதாரர் மனு மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் அளித்த மனுவில் இணைக்கப்பட்ட கட்டிட புகைப்படம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலர் 10.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் விளக்கம் அளிக்கக் கோரி அழைப்பாணை அனுப்பப்பட்டது.

9. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் 10.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மனுதாரர் திரு. ப. முருகன் அவர்கள் 27.06.2024 நாளிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–க்கு அளித்த மனுவில் இணைத்துள்ள புகைப்படத்தில் உள்ள கட்டிடத்தின் விவரம் கண்டறிந்து அதனை ஒரு வாரத்திற்குள் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறேன் என்ற விவரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.".

10. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் செயற்பொறியாளர் தனது 24.10.2025 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்–9, பகுதி 26, கோட்டம் 112 கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட எண் 27, தெற்கு சிவன் கோவில் தெருவில் விதிமீறல் கட்டிடம் சம்பந்தமாக திரு. பா. முருகன் என்பவரின் முறையீட்டு மனு குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மண்டலம்–9, பகுதி 26, கோட்டம் 112 கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட எண் 27, தெற்கு சிவன் கோவில் தெருவில் எண் 27 என்கிற கதவு எண் கொண்ட கட்டிடம் ஏதும் இல்லை. மேற்கொண்டு தகவல் உரிமை ஆணையத்திற்கான புகாரில் விதிமீறல் கட்டிடம் என புகைப்படம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அப்புகைப்படம் சிவன் கோவில் தெருவில் உள்ளது. தெற்கு சிவன் கோவில் தெருவில் கட்டப்படவில்லை மற்றும் முகவரி தவறாக தெரிவித்து மனு அளிக்கப்பட்டதால் இம்மனு மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

11. மனுதாரருக்கு 20.08.2025 அன்று விசாரணையில் நேரடியாக ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டும், தொலைபேசி மூலம் நினைவூட்டப்பட்டும், மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக இயலாத காரணத்தை எழுத்துபூர்வமாக பதில் அளிக்காமலும், 20.08.2025 அன்று விசாரணைக்காக ஆஜராகாமல் இருந்தது மிகவும் கண்டிக்கத்தக்கது.

12. மனுதாரரின் முறையீட்டு மனு, மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

சென்னை–24, கோடம்பாக்கம், தெற்கு சிவன் கோவில் தெரு, கதவு எண் 27 –ல் கட்டப்படும் கட்டிடம் கட்டிட அனுமதி பெறாமல் கட்டுப்படுதாகவும், அக்கட்டிடம் அருகே உள்ள சாலை மற்றும் நடைபாதையை ஆக்கிரமித்து உள்ளதாகவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் அலுவலகத்தில் புகார் தெரிவித்தும், நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், எனவே, கட்டிட உரிமையாளருக்கு வரைபடத்தின்படி, பார்க்கிங் வசதியுடன் கட்டிடம் கட்ட தாக்கீது வழங்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுவின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட புகார் குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112 கோடம்பாக்கம் பகுதிக்குட்பட்ட எண் 27 தெற்கு சிவன் கோவில் தெருவில் எண் 27 என்கிற கதவு எண் கொண்ட கட்டிடம் ஏதும் இல்லை என்பதும், மனுதாரர் புகாரில் விதி மீறல் கட்டிடத்திற்கான கட்டிடத்தின் புகைப்படத்தில் உள்ள கட்டிடம் சிவன் கோவில் தெருவில் உள்ளது என்பதும், மனுதாரர் புகாரில் தெரிவித்த கட்டிடம் தெற்கு சிவன் கோவில் தெருவில் கட்டப்படவில்லை

என்பதும், முகவரி தவறாக உள்ளது என்பதால், மனுதாரர் மனு மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

எனவே, இந்நேர்வில், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் அளித்த புகாரில் குறிப்பிட்டுள்ள முகவரி கொண்ட கட்டிடம் ஏதுமில்லை என்பதால், மனுதாரர் மனு மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் நவம்பர் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. பா. முருகன்,
கதவு எண் 27,
காமராஜர் காலனி, 3வது தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) உதவி ஆணையர், மண்டலம் 9,
4, லேக் ஏரியா 4வது குறுக்கு தெரு,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை–600 034.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

14/11/25

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032